# பேச்சு மற்றும் ஒன்றுகூடல் சுதந்திரம் பிரித்தானியா இலங்கையிடம் கேள்வி



இலங்கை மக்களின் பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரம் தொடர்பாக பிரித்தானியா இலங்கை அரசாங்கத்திடம் கேள்வியெழுப்பியுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸீக்கும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பட்ரிக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இலங்கையின் பேச்சுச் சுதந்திரம் தொடர்பாகக் கேள்வியெழுப்பியுள்ளார்.

பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாகத் திறந்த உரையாடலைக் கட்டியெழுப்புவதில் மகிழ்ச்சியடைவதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் இந்தச் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

ஒன்லைன் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலங்கள் குறித்து இருவரும் விவாதித்துள்ளதுடன், இலங்கை முழுவதும் பேச்சுச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடல் சுதந்திரத்தை நிலைநிறுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதாகவும் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (க)


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 10 புதன்கிழமை 27.09.2023 கதிர் 80







## உயர்தரப் பரீட்சைக்கான புதிய திகதிகள் திங்கட்கிழமைக்குள் இறுதித் தீர்மானம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான திகதிகள் தொடர்பாக இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை, என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உயர்தரப் பரீட்சைக்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ள திகதிகள் மாற்றப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியதையடுத்து திகதிகள் மாற்றப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க)

## முள்ளிவாய்க்காலில் புலிகளின் தங்கம், ஆயுதங்களைத் தேடி மூன்றாவது நாளாகவும் அகழ்வுப்பணிகள் முன்னெடுப்பு



முல்லைத்தீவு – முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட தங்கம் மற்றும் ஆயுதங்களைத் தேடி மூன்றாவது நாளாக அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், தடயவியல் பொலிஸார், இராணுவத்தினர், குறித்த பகுதிக்குரிய கிராம அலுவலர் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் குறித்த அகழ்வுப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

2➤

## புதிய மதுபானசாலைகள் யாழுக்கு வேண்டாம்!

### அவைத்தலைவர் சிவஞானத்தின் கோரிக்கை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நிராகரிப்பு!

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிதாக எந்த ஒரு மதுபானசாலையும் அமைக்க அனுமதி வழங்கக்கூடாது என யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும், என வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்த போதிலும் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளையில் புதிதாக மதுபானசாலை ஒன்று அமைப்பதற்கு எடுத்த முயற்சிக்கு பொதுமக்களின் எதிர்ப்பு காணப்பட்டமை தொடர்பாக,

2➤

## இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதற்கு தமிழ் எம்.பிக்கள் தமிழக முதலமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்!

### கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



சட்டவிரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் நுழையும் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்தும் செயற்பாட்டினை கடற்படையினர் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற போதிலும் இந்திய மீனவர்களைக் கைது செய்யும் செயற்பாட்டில் கடற்படையினர் தயக்கம் காட்டுவதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

2➤

## போதைப்பொருள் இல்லாத நாட்டை உருவாக்குவதற்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணையவேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் சம்மதித்தால், மது,புகையிலை, சிகரெட் மற்றும் போதைப்பொருள் பாவனையில்லா நாட்டை உருவாக்க முடியுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற, போதைப் பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கான பரிந்துரைகளை பெறுவதற்கான விசேட நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே

2➤

## கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும் மஹிந்தானந்த அளுத்கமகே எம்.பி. வலியுறுத்து!



உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உட்பட நாட்டுக்கு வரி வருமானத்தை ஈட்டும் நிறுவனங்களை கண்காணிப்பதற்கு விசேட பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீகத் திட்டங்கள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அரச வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு செயற்படாத அதிகாரிகள் தொடர்பில் அரசாங்கம் கடுமையான தீர்மானங்களை எடுக்க வேண்டும், எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் வைத்து, தேசிய பொருளாதாரம் மற்றும் பௌதீகத் திட்டங்கள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மஹிந்தானந்த அளுத்கமகே இந்த விடயத்தை கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு இடையே இடம்பெற்ற கலந்துரையாடல் மிகவும் வெற்றிகரமாக அமைந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2➤

## சர்வதேச சுற்றுலா தின சிறப்பு நிகழ்வுகள் யாழ். பல்கலையில் இன்று ஆரமபமாகின



சர்வதேச சுற்றுலா தினத்தையொட்டி யாழ். பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ள சிறப்பு நிகழ்வுகள் இன்று காலை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

துறைசார் நிபுணர்கள், சுற்றுலா அதிகாரசபை அங்கத்தவர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள்

2➤

# இலங்கை எரிபொருள் வியாபாரத்திற்குள் மற்றுமொரு சீன நிறுவனம் நுழைகிறது

இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திடம் இருந்து அடுத்த நான்கு மாதங்களுக்காக, 4 டீசல் கப்பல்களை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தை சீனாவின் பேட்ரோசைனா நிறுவனம் பெற்றுள்ளது.

இதற்காக ஐந்து ஏலங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, அதில், சிங்கப்பூரைச் சேர்ந்த பெட்ரோசைனா நிறுவனத்துக்கு ஒப்பந்தம் வழங்குவதற்கு, அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட சிறப்பு நிலை கொள்முதல் குழு அனுமதித்துள்ளது.

இதேவேளை, ஏற்கனவே சீனாவின் சினோபெக் நிறுவனமும் இலங்கையின் உள்நாட்டு எரிபொருள் வர்த்தகத்தில் இணைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

## கம்பளையில் சாரதியை கடத்திய ஐவர் மாட்டினர்

இ.போ.ச. பஸ் சாரதி மீது கத்திக் குத்து தாக்குதல் நடத்திவிட்டு அவரை வானில் கடத்திச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணொருவர் உட்பட ஐவர் கொழும்பில் வைத்து கம்பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொத்மலை, கடதொர பிரதேசத்தைச் சேர்ந்த இ.போ.ச. பஸ் சாரதியான ஹேமந்த ராஜபக்ச, கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இ.போ.ச. பஸ்ஸில் பயணியாக வந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில் கம்பளை, ரிவர் சைட் பகுதியில் வைத்து நால்வர் குறித்த பஸ்ஸில் ஏறியுள்ளனர்.

பின்னர் அவர் மீது கத்திக் குத்து தாக்குதல் நடத்தி, அவரைக் கம்பளை, ஜயமாலபுர பகுதியில் வைத்து வானொன்றில் கடத்திச் சென்றனர்.

இந்நிலையில் அன்றைய தினம் இரவே, ஒரு கொடவத்தை பிரதேசத்தில் வைத்து கடத்தல்காரர்களிடமிருந்து தப்பி வந்த சாரதி, கம்பளை பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்தார். பின்னர் சிகிச்சைக்காகக் கம்பளை வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த கம்பளை பொலிஸார் சந்தேகநபர்கள் 6 பேரில் ஐந்து பேரை கொழும்பில் வைத்து கைது செய்துள்ளதுடன், பழமையான வாள் ஒன்றையும், கடத்தலுக்குப் பயன்படுத்திய வானையும் கைப்பற்றியுள்ளனர். தொல்பொருள் பெறுமதிமிக்கதாகக் கூறப்படும் அந்த வாளுக்காகவே சாரதி கடத்தப்பட்டு, தாக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

கம்பளை பொலிஸார் தொடர்ந்தும் சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தவும், தலைமறைவாகியுள்ள மற்றைய சந்தேகநபரைக் கைது செய்யவும் கம்பளை பொலிஸார் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

### சர்வதேச சுற்றுலா தின ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்ட ஆரம்ப நிகழ்வு கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இதில், அனுபவப் பகிர்வுகள், ஆலோசனைகள், கருத்தாடல்களோடு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இன்று முதல் வரும் 29 ஆம் திகதி வரை மாலை 4 மணி தொடக்கம் 8 மணி வரை கைவினைப் பொருட்கள், உணவுப் பொருட்களைக் கொண்ட கண்காட்சி இடம்பெறுகிறது. (04)

### கடுமையான தீர்மானங்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்திற்கு இடையிலான ஒப்பந்தத்தின் பிரகாரம் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் குறித்து நாட்டுக்கு அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் பரிந்துரைத்த மூன்று முக்கிய விடயங்கள்படி, பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்குக் கொண்டு வருதல், அந்நியச் செலாவணிக் கையிருப்பை அதிகரித்தல், அரச வரி வருமானத்தை அதிகரித்தல் என்பனவும் அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

### போதைப்பொருள் இல்லாத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், விஜபி வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி விமான நிலையத்தில் இருந்து தங்கம் கொண்டு வந்த எம்பிக்கு எதிராக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக தீர்மானம் கொண்டு வந்ததைப்போன்று, போதைப்பொருள் பாவனையில் இருந்து நாட்டை விடுவிப்பதற்கும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைய வேண்டும்.

மேலும், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக சிங்கப்பூரில் உள்ளதைப் போன்று கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதன் மூலம் தற்போதைய பாடசாலை கட்டமைப்பை ஆட்கொண்டுள்ள போதைப்பொருள் கடத்தலுக்கும் முற்றுப் புள்ளி வைக்க முடியும், எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

### இந்திய மீனவர்களை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருக்கிறார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இன்றைய கூட்டத்தில் சட்டவிரோத மீன்பிடிச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகப் பிரஸ்தாபிக்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குறிப்பாக, வடபகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை தொடர்ச்சியாக இடம்பெறுகின்றது. அதற்கு கட்டுப்பாடுகளைக் கொண்டுவர கடந்த 20 வருட காலமாக நான் முயற்சித்து வருகின்றேன். இந்த அத்துமீறலைக் கட்டுப்படுத்துவதற்காகப் பல பேச்சுவார்த்தைகளிலும் நான் கலந்து கொண்டேன்.

ஆனால், அந்தப் பேச்சுவார்த்தைகளில் எந்த சாதகமான முடிவும் எட்டப்படவில்லை அதேபோல, இலங்கைக் கடற்படையினரும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்துவதில் பின்னடிப்பதாகவே நான் கருதுகின்றேன்.

நான் கடந்த சில நாட்களாக ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கின்றேன். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழகம் சென்று இந்த விடயம் தொடர்பாக அங்குள்ள முதலமைச்சருடன் கலந்துரையாடி ஓர் உண்மையான நிலைமையினை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடு. அதற்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்பார்கள் என நம்புகின்றேன்.

எனவே எதிர்வரும் காலத்தில் இந்தியா சென்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் எமது மீனவர்களின் உண்மையான நிலையினை இந்திய மீனவர்களுக்கு எடுத்துரைப்பதன் மூலம் இதற்கு ஒரு சாதகமான முடிவினை எடுக்க முடியும், எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மீனவர்கள் எல்லை தாண்டும் பிரச்சனை, இலங்கையில் மாத்திரமல்ல இது ஏனைய உலக நாடுகளிலும் காணப்படுகின்றது இரு நாடுகளின் பிரச்சினையை இரு நாடுகளுக்குமிடைலான பேச்சு வார்த்தை மூலமே தீர்க்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (01)

### புதிய மதுபானசாலைகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இடம் பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டபோதே வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் மேற்படி கோரிக்கையினை முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் மதுபானசாலைகள் போதுமான அளவு உள்ளதாகவும் இனி யாழ் மாவட்டத்திற்கு மதுபானசாலைகள் எதுவும் புதிதாகத் தேவையில்லை எனவும், புதிய மதுபானசாலைகளுக்குரிய அனுமதியினை வழங்கக்கூடாது எனத் தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

குறித்த விடயத்தில் தலையிட்ட வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ் மாவட்டத்திற்கு எத்தனை மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்க முடியும் என்ற ஒரு நியதி உள்ளது. அதனைப் பரிசீலித்துத்தான் தீர்மானிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

கள்ளுத் தவறணைகளையும் சேர்த்து யாழ்ப்பாண மாவட்டத்தில் 146 மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்க முடியும் எனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதையடுத்து, வடக்கு மாகாண சபை அவைத்தலைவரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. (க)

### முள்ளிவாய்க்காலில் புலிகளின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த பகுதியில் விடுதலைப்புலிகளின் காலத்தில் தங்கம், ஆயுதம் உள்ளிட்ட பொருட்கள் புதைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே கடந்த 25ஆம் திகதி அகழ்வுப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அந்தவகையில் இரண்டாம் நாளான நேற்று அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தபோது அகழப்பட்ட குழியிலிருந்து நீர் ஊற்றெடுத்த காரணத்தினால், அகழ்வுப்பணிகள் இடை நிறுத்தப்பட்டு, நீர் இறைக்கும் மின் மோட்டார் இரண்டைப் பயன்படுத்தி குழியிலுள்ள நீரை அகற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழலில் குறித்த அகழ்வுச் செயற்பாடுகள் முன்றாவது நாளாக இன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எவ்வாறு இருப்பினும் இதுவரை இடம்பெற்ற அகழ்வுப் பணிகளில் எவ்வித ஆயுதங்களோ, தங்கங்களோ மீட்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (04)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

# கலாசாலையில் நூற்றாண்டுச் சிறப்புரை

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்றுவரும் நூற்றாண்டுச் சிறப்புரை வரிசையில் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் மேனாள் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா - பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் மகத்துவம் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார். கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விரிவுரையாளர் வேல்.நந்தகுமார் அதிதி அறிமுகவுரையை ஆற்றினார்.

உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவி சாருகேசி நிரோஜன் உடல் ஆரோக்கியத்திற்காக உடற்பயிற்சியின் அவசியம் குறித்து உரை ஆற்றினார். ஆசிரிய மாணவி வதனா சிவசம்பு நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார். நிகழ்வில் கலாசாலை முகாமைத்துவக் குழுவினரால் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கௌரவிக்கப்பட்டார். (04)



# கிளிநொச்சியில் கலைஞர்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கல்



கிளிநொச்சி மாவட்ட செயலமும், “ஏழ்மைக்கு உதவும் உறவுகள்” அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்த கலைஞர்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

ஏழ்மைக்கு உதவும் உறவுகளின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் திருமதி. ஹ.சத்தியஜீவிதா அவர்கள் அதிதியாக கலந்து கொண்டு குறித்த உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தார்.

சுவிஸ் நாட்டைச்சேர்ந்த “தமிழர் கலை கலாச்சார மன்றம்” ஊடாக, விஜய் குணனனின் 15 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவரது குடும்பத்தாரின் நிதி அனுசரணையில் குறித்த உலருணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப் பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 22 கலைஞர்களுக்கு இவ்வாறு உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலகமும், மாவட்ட கலாசார அதிகார சபையும் இணைந்து வெளியிட்ட ”கிளிமலர்” நூலொன்று ஏழ்மைக்கு உதவும் உறவுகளின் அலுவலகத்திற்கு உதவி மாவட்ட செயலாரால் வழங்கி வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கா.இராசதுரை, கரைச்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வே.தர்மபாலன், ஏழ்மைக்கு உதவும் உறவுகளின் இலங்கைக்கான இயக்குநர் திருமதி. உசா சசிக்குமார் மற்றும் ஆலோசகர் வே.வசந்தரூபன், மற்றும் கலைஞர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (02)

# யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து ஓராள் ஆற்றுகை பரிசுப் போட்டி

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் மரபுவழி ஆற்றுகையாளரை ஊக்கப்படுத்தவும் நலிந்து செல்லும் கூத்துமரபுக்கு புத்துயிர் கொடுக்கவும் “யாழ்ப்பாண தென்மோடி கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி“ அடுத்த மாதத்தில் நடத்தப்படவுள்ளது. மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டியில் முதலாம், இரண்டாம் பிரிவுகள் பாடசாலை மாணவர்களுக்காகவும் மூன்றாம் பிரிவு திறந்தபோட்டியாகவும் அமையவுள்ளது.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

முதலாம் பிரிவில் தரம் 6 தொடக்கம் 9 வரையிலான மாணவர்கள் பங்குபற்றலாம். முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு முறையே ரூபா10000, ரூபா 7000, ரூபா 5000 பணப்பரிசுகள் வழங்கப்படும்.

இரண்டாம் பிரிவில் தரம் 10 தொடக்கம் 13 வரையிலான மாணவர்கள் பங்குபற்றலாம். முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு முறையே ரூபா 12000, ரூபா 7000, ரூபா 5000 வழங்கப்படும்.

மூன்றாம் பிரிவு திறந்தபோட்டியாக நடைபெறும். இதில் 20 வயது தொடக்கம் 35 வயது வரையிலான ஏனையவர்கள் பங்குபற்றலாம். முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்கு முறையே ரூபா 20000, ரூபா15000, ரூபா10000.00 வழங்கப்படும்.

ஒருவரே தனி ஆற்றுகையாளராக பங்கேற்கும் இப்போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பங்குபற்ற முடியும்.

போட்டியாளர்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பப் படிவத்தை ஒக்டோபர் 5 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக, “யாழ்ப்பாண தென்மோடிக் கூத்து ஓராள் ஆற்றுகைப் போட்டி“ எனக் குறிப்பிட்டு, திருமறைக் கலாமன்றம், இல.238,பிரதான வீதி, யாழ்ப்பாணம் - என்னும் முகவரியில் நேரடியாக ஒப்படைக்கலாம் அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக்கலாம்.

இவைதவிர 077 4028031, 077 6692657 என்னும் தொலைபேசி இலக்கங்களுக்கு வட்ஸ் அப் மூலமாகவும் அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (04)

# மணியம் தோட்டத்தில் கண்காட்சி

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் வழிநடத்தலில் மணியம் தோட்டம் ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் கீழ் இயங்கும் “இணைந்த கரங்கள்“ நடத்தும் “எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்“ என்னும் மாபெரும் கண்காட்சி எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை மணியம் தோட்டம் இரண்டாம் குறுக்குத் தெருவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில், யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்கள், இலங்கையின் சர்வமத இனமக்களும் அவர்களின் உணவுப் பழக்கங்களும், எதிர்காலச் சமூகம் மறந்து போகும் பழைய காலத்துப் பாவனைப் பொருட்கள் உட்பட பல்வேறு வகையான சிறப்பம்சங்கள் இடம்பெறுகின்றன.

இவற்றுடன் மணியந்தோட்ட மண்ணில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனைக் கூடம், மகிழ்வூட்டும் விளையாட்டுக்கள் என்பனவும் இடம் பெறவுள்ளன.

சிறுவர்களையும், இளைஞர்களையும்,பெண்களையும் முதன்மைப்படுத்தி அவர்களின் திறன்களை வெளிக்கொண்டுவரும் வகையில் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
உலக சுற்றுலா தினம்
2023
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
The Valampuri
A1
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர் :-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# ஈராக்கில் சோகத்தில் முடிந்த திருமணம் தீ விபத்தில் 100 பேர் பலி - பலர் படுகாயம்




ஈராக்கில் நடைபெற்ற திருமண நிகழ்வில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 100 பேர் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கு இராக், நினிவே மாகாணத்தில் உள்ள ஹம்தானியா நகரில் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற திருமண நிகழ்வொன்றில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றிருந்தனர்.

அப்போது, திருமண மண்டபத்தில் திடீரென்று தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. தீ விபத்தால் கட்டிடத்தின் கூரைகள் அங்காங்கே இடிந்து விழுந்ததில் தீ வேகமாக பரவியுள்ளது. இதனால், மண்டபத்தை விட்டு வெளியேற முடியாமல் நூற்றுக்கும் மேற்பட்டோர் தீயில் கருகி பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதில் புதுமணத் தம்பதிகளும் இறந்துவிட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த அசம்பாவிதத்தில் 150 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளதால் உயிரிழப்பு அதிகரிக்கும் அபாயம் எழுந்துள்ளது. இந்த விபத்தில் காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.


முதல்கட்ட விசாரணையில், திருமண நிகழ்வின் போது வெடித்த பட்டாசுகளால் தீ விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது. மேலும், உயர்நிலைக் குழு விசாரணைக்கு ஈராக் அரசு உத்தரவிட்டுள்ளது. (04)

## பா.ஜ.க. கூட்டணியில் சந்தர்ப்பவாதக் கட்சிகள் மட்டுமே உள்ளன முன்னாள் மத்திய சட்டத்துறை அமைச்சர் கபில் சிபல் கருத்து

பா.ஜ.க. கூடாரத்தில் இன்னும் இருப்பது எந்த கொள்கையும் இல்லாத சந்தர்ப்பவாதக் கூட்டணிக் கட்சிகள்தான் என்று அ.தி.மு.க. விலகலுக்குப் பின்னர், முன்னாள் மத்திய சட்டத்துறை அமைச்சர் கபில் சிபல் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து விலகியதை திங்கட்கிழமை அ.தி.மு.க. அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இந்த நிலையில், தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து அ.தி.மு.க விலகியது குறித்து முன்னாள் மத்திய சட்டத்துறை அமைச்சரும், மாநிலங்களவை உறுப்பினருமான கபில் சிபல் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து மற்றொரு கட்சியான அ.தி.மு.க. விலகி உள்ளது. இன்னும் பா.ஜ.க.வுடனான கூட்டணியில் இருப்பவர்கள் எந்தக் கொள்கையும் இல்லாத சந்தர்ப்பவாதக் கூட்டணி கட்சிகள். அதாவது, மகாராஷ்டிராவில் உள்ள அஜித்பவார், ஏக்நாத் ஷிண்டே போன்றவர்களின் கட்சிகளும், வடகிழக்கு மாநிலத்தில் உள்ள அரசியல் கட்சிகளும்



தான் உள்ளன. பா.ஜ.க. வானது கூடாரத்தில் புகுந்த ஒட்டகம் போன்றது. - என்று கபில் சிபல் டுவிட்டரில் விமர்சித்துள்ளார்.

## எத்தியோப்பியாவில் பட்டினியால் 1,329 பேர் மரணமானதாக அறிக்கை

கிழக்கு ஆப்பிரிக்க நாடான எத்தியோப்பியாவில் 2 ஆண்டு கால உள்நாட்டுச் சண்டை முடிவுக்கு வந்த பிறகு அந்த நாட்டின் டிக்ரே மாகாணத்தில் பட்டினி காரணமாக 1,329 பேர் உயிரிழந்துள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

இது குறித்து உள்ளூர் சுகாதாரத் துறையும், மக்கலே பல்கலைக்கழகமும் இணைந்து மேற்கொண்ட ஆய்வின் அறிக்கையில், உள்நாட்டுப் போரால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாணமான டிக்ரேவின் தலைநகர் மிகேலியில் அண்மைக் காலமாக ஏற்படும் உயிரிழப்புகளுக்கு உணவுப் பற்றாக்குறை முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

டிக்ரேவின் 2 துணை மாவட்டங்கள் மற்றும் 53 உள்நாட்டு அகதிகள் முகாமில் கடந்த ஆகஸ்ட் 15 முதல் 29 வரை நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில், அந்தப் பகுதிகளில் இதுவரை 1,329 பேர் பட்டினியால்



உயிரிழந்திருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. டிக்ரேவில் 88 துணை மாவட்டங்களும், 643 உள்நாட்டு அகதிகள் முகாம்களும் உள்ளன. அவற்றிலும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டால் பட்டினி மரணங்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

டிக்ரே பிராந்தியத்தில், மிகப்பெரிய ஆயுத பலம் கொண்ட டிக்ரே மக்கள் விடுதலை முன்னணி (டிபிஎல்எப்), எத்தியோப்பிய அரசில் மிகுந்த செல்வாக்கு பெற்றதாக இருந்தது. எனினும், நாட்டின் பிரதமராக அபை அகமட் கடந்த 2018 ஆம் ஆண்டு பதவியேற்ற பிறகு, டிபிஎல்எப் ஓரங்கட்டப்பட்டது. இதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு மோதலாக உருவெடுத்தது. 2 ஆண்டுகளாக நடைபெற்ற அந்த மோதலில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

சர்வதேச நாடுகளின் முயற்சியில் இரு தரப்பினருக்கும் இடையே கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் மோதல் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (04)

## காலிஸ்தான் பிரிவினைவாதி கொலை விசாரணை தொடர்வது முக்கியமானது - அமெரிக்கா கருத்து

காலிஸ்தான் பிரிவினைவாதி ஹர்தீப் கொல்லப்பட்ட விவகாரம் தொடர்பான கனடாவின் விசாரணை தொடர்ந்து நடைபெறுவதும், குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவதும் முக்கியமானது' என்று அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது

நிஜ்ஜார் கொலையில் இந்திய உளவு அமைப்புகளுக்குத் தொடர்பிருக்கலாம், எனக் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார். இந்தக் குற்றச்சாட்டை இந்தியா உறுதியாக மறுத்தது.

இந்தியாவுக்கு எதிராக கனடாவில் செயல்படும் பயங்கரவாதிகள் மீது அந்த நாடு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் இந்தியா வலியுறுத்தியது. அதிலிருந்தே இந்தியா-கனடா இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனிடையே 'நிஜ்ஜார் கொல்லப்பட்ட விவகாரத்தில் கனடா மேற்கொண்டு வரும் விசாரணைக்கு இந்தியா ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்' என்று அமெரிக்கா வலியுறுத்தியது. தற்போது, இதனை அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து வொஷிங்டனில் தினசரி பத்திரிகையாளர் சந்திப்பின்போது அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மத்யூ மில்லர் தகவல் வழங்கினார். நிஜ்ஜார் கொல்லப்பட்ட விவகாரத்தில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் மிகுந்த கவலை அளிக்கின்றன. இந்த விவகாரத்தில் கனடாவுடன் அமெரிக்கா தொடர்ந்து தகவல் தொடர்பை மேற்கொண்டு வருகிறது.

கனடாவின் இந்த விசாரணை தொடர்வதும், குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவதும் முக்கியமானது என அமெரிக்கா நம்புகிறது. கனடாவின் இந்த விசாரணைக்கு இந்திய அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனப் பொதுவாகவும் தனிப்பட்ட முறையிலும் அமெரிக்கா கேட்டுக்கொள்கிறது. என்று அவர் கூறியுள்ளார். (04)

## வடகொரிய அரசுக்கு எதிரான வெளியீடுகள் தென்கொரியாவில் சட்டத் தடை நீக்கப்பட்டது



வடகொரிய அரசுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பிரசுரங்களை பலூன்கள் மூலம் தங்கள் நாட்டிலிருந்து அனுப்புவதை கிரிமினல் குற்றமாக்கும் சட்டத்தைத் தென்கொரிய அரசியல் சாசன நீதிமன்றம் செல்லாததாக அறிவித்துள்ளது.

இந்தத் தடை, கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரானது என்று கூறி, அந்தச் சட்டத்தை நீதிமன்றம் ரத்துச் செய்துள்ளது. 1950-53 ஆம் ஆண்டுகளின் கொரியப் போருக்குப் பிறகு அமெரிக்காவும், தென் கொரியாவும் இணைந்து அவ்வப்போது கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இது, தங்களது நாட்டின் மீது போர் தொடுப்பதற்கான ஒத்திகை என்று வட கொரியா கருதுகிறது. அத்தகைய பயிற்சிகள் நடந்தால் அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் வட கொரியா ஏவுகணைகளைச் செலுத்திப் பரிசோதித்து வருகிறது. இதனால் தென் கொரியாவுக்கும், வட கொரியாவுக்கும் இடையே பதற்றம் தொடர்ந்து வருகிறது.

இந்தச் சூழலில், கடந்த 2017 முதல் 2022 வரை தென் கொரியாவில் நடைபெற்று வந்த அதிபர் மூன் ஜே-இன் தலைமையிலான மிதவாத அரசு, வட கொரியாவுடன் சமாதானப் போக்கைக் கடைப்பிடித்தது. அப்போது, வட கொரியாவைத் திருப்திப்படுத்தும் வகையில் பலூன்கள் மூலம் அந்த நாட்டு அரசுக்கு எதிராகப் பிரசுரங்களை அனுப்புவதை கிரிமினல் குற்றமாக்கும் சட்டத்தை மூன் ஜே-இன் அரசு நிறைவேற்றியதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், தற்போது அந்தச் சட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது. (04)


வட மாகாண
சுற்றுலாப் பணியகமும்
தொழிற்துறைத் திணைக்களமும்
இணைந்து நடாத்தும்
உலக சுற்றுலா தினம் - 2023
வடக்கின் திருவிழா
பாரம்பரிய இசை மற்றும் நடன நிகழ்வுகள்
கைவினைப் பொருட்கள் விற்பனை
உணவு விற்பனை
நீர் விளையாட்டுக்கள்
29.09.2023
காலை 09.00 - இரவு 09.00
WORLD TOURISM DAY 2023
TOURISM & GREEN INVESTMENTS
இடம்: யாழ்ப்பாண கலாசார நிலையம்
ஊடக அனுசரணை :
காலைக்கதிர்
Kalaikkathir

# சன்மார்க்க வளர்ச்சி, சமூக சீர்திருத்தங்களுக்காகக் கரிசனையுடன் பங்காற்றிய ஹுஸைனுதீன் மௌலவியின் மறைவு பேரிழப்பாகும்

## அம்பாறை மாவட்ட உலமா சபை அனுதாபம்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

சன்மார்க்க வளர்ச்சிக்கும் சமூகச் சீர்திருத்தங்களுக்கும் மிகவும் கரிசனையுடன் பங்காற்றி வந்த கிழக்கிலங்கையின் மூத்த உலமா எம்.ஐ.ஹுஸைனுதீன் மௌலவியின் மறைவு, முஸ்லிம் சமூகத்திற்குப் பேரிழப்பாகும் என்று அம்பாறை மாவட்ட உலமா சபை தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்ட ஜம்மியதுல் உலமா சபையின் முன்னாள் பொருளாளரும் மருதமுனை ஜம்மியதுல் உலமா மற்றும் அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவருமான மௌலவி எம்.ஐ. ஹுஸைனுதீன் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னாரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து அம்பாறை மாவட்ட உலமா சபையின் சார்பில் அதன் தலைவர் ஐ.எல்.எம்.ஹாஷிம் மௌலவி, செயலாளர் ஏ.எல்.நாசிர் கனி மௌலவி ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

இஸ்லாமிய சன்மார்க்கத்தில் ஆழ்ந்த அறிவும் தெளிவும் கொண்டிருந்த ஹுஸைனுதீன் மௌலவி மிகச்சிறந்த மார்க்கப் பிரச்சாரகராகத் திகழ்ந்தார். தனது ஆளுமையான குரல் வளத்தையும் அறிவையும் கொண்டு, குத்பாப் பிரசங்கங்கள் மற்றும் மார்க்க சொற்பொழிவுகள் மூலம் சமூக சீர்திருத்தங்களையே அதிகம் வலியுறுத்தி வந்துள்ளார்.

அம்பாறை மாவட்ட ஜம்மியதுல் உலமா சபையின் பொருளாளராக பணியாற்றிய அன்னார், சபையின் செயற்பாடுகளில் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் பங்காற்றி வந்துள்ளார். அவ்வாறே மருதமுனை பிரதேசத்திற்கான ஜம்மியதுல் உலமா கிளைக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி, அதனை மிகவும் சிறப்பாக வழிநடாத்தியிருக்கிறார்.

அத்துடன் மருதமுனைப் பிரதேசத்தில் உள்ள அனைத்துப் பள்ளிவாசல்களையும் ஒன்றிணைத்து சம்மேளனம் ஒன்றை உருவாக்குவதில் அன்னார் முன்னின்று உழைத்ததுடன் அதன் தலைவராகவும் உன்னதப் பணியாற்றியிருந்தார். இந்த அமைப்பானது இன்றும் ஊரின் கல்வி, கலாசார, சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக பெரும் பங்காற்றி வருவதை அறிவோம்.

மருதமுனையில் சகாத் நிதியத்தை ஸ்தாபிப்பதிலும் பெரும்பங்காற்றிய ஹுஸைனுதீன் மௌலவி, அதன் தலைமைத்துவத்தை அமானிதமாக சுமந்து மிகவும் பொறுப்புடன் கடமையாற்றியுள்ளார். இவ்வாறு, பல்வேறு பட்ட பொது நிறுவனங்கள் ஊடாக ஊரினதும் மக்களினதும் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அன்னார் தன்னை அர்ப்பணித்து, பொதுச் சேவைகளில் ஈடுபட்டு வந்துள்ளார்.

மேலும், ஹஜ் கடமைக்காக மக்கா செல்கின்ற யாத்திரிகர்களின் நலன் கருதி நிறுவனம் ஒன்றை ஸ்தாபித்து, நீண்ட காலமாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான யாத்திரிகர்களை மக்காவுக்கு அழைத்துச் சென்று, ஹஜ் கடமையை மிகவும் நேர்த்தியாக நிறைவேற்றும் வகையில் சிறந்த வழிகாட்டியாகப் பணியாற்றியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கல்முனைப் பிராந்தியத்தில் பாடசாலை மாணவர்களுக்கு போசணை நிறைந்த பிஸ்கட்டுகள் வழங்கல் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் போசணை முகாமைத்துவம் என்பனவற்றை கருத்தில் கொண்டு பாடசாலை மாணவர்களின் போசாக்கினை மேம்படுத்தும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போசாக்கு உணவு வழங்கும் விசேட வேலைத் திட்டத்தின் ஊடாக இன்றும் தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளுக்கு போசாக்கு நிறைந்த பிஸ்கட்டுகள் வழங்கி வைக்கப்பட்டன

கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் வழிகாட்டலுக்கமைவாகவும் அக்கரைப்பற்று ஆயுர்வேத மருந்து உற்பத்தி பிரிவினால் தயாரிக்கப்பட்ட போசாக்கு பிஸ்கட்டுகளை பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று கல்முனை பிராந்திய சுகாதார



சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் இடம்பெற்றது.

கல்முனைப் பிராந்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட அட்டாளைச்சேனை அல்-முனீரா பெண்கள் உயர் பாடசாலை, நிந்தவூர் ஜெர்மன் நட்புறவு கனிஷ்ட பாடசாலை, அட்டப்பள்ளம் ஸஹிதா வித்தியாலயம் என மூன்று பாடசாலைகளின் மாணவர்களுக்கே மேற்படி போசாக்கு பிஸ்கட்டுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பீ.அப்துல் வாஜித், தொற்றா நோய்ப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஐ.எம்.எஸ். இர்ஷாத், கல்முனை பிராந்திய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.நபீல், அட்டாளைச்சேனை ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஐ.எல்.அப்துல் ஹைு, ஆயுர்வேத வைத்தியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஆயுர்வேத மருந்துப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட பல்வேறு போசாக்கு கூறுகள் அடங்கிய குறித்த பிஸ்கட்டுக்கள் சுவை மற்றும் தரம் வாய்ந்ததாக உள்ளதாகவும் அவற்றை தொடர்ந்தும் வழங்க வேண்டும் எனவும் பாடசாலை மாணவர்கள் இதன்போது குறிப்பிட்டனர்.






## பற்றிமாவில் மாணவர் நாடாளுமன்றம்

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற நிகழ்வு கல்லூரி அதிபர் அருட் சகோதரர் றெஜினோல்ட் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

(படம் - வி.ரி.சகாதேவராஜா)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.09.2023இல் வெளியிடப்பெற்றது.